RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

DOI: 10.54392/ijot2232

# தமிழ் நாட்டுப்புறப் பாடல்களில் உளவியல்

கு. நிவேதா [அ,*], ப. சசிரேகா [ஆ], த. புவனேஸ்வரி [இ], ம. ராஜா [ஈ]

[அ] தமிழாய்வுத்துறை, பாரதியார் மகளிர் கலை மகளிர் கல்லூரி, தேவியாக்குறிச்சி-636112, தமிழ்நாடு, இந்தியா

[ஆ] தமிழாய்வுத்துறை, காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620028, தமிழ்நாடு, இந்தியா

[இ] தமிழ்த்துறை, ஏ.பி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி-628002, தமிழ்நாடு, இந்தியா

[ஈ] தமிழ்த்துறை, தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620002, தமிழ்நாடு, இந்தியா

# Psychology in Tamil Folk Songs

K. Nivetha [a, b, *], P. Sasirekha [b], T. Bhuvaneshwari [c], M. Raja [d]

[a] Department of Tamil Studies, Bharathiyar Arts & Science College for Women, Deviyakurichi-636112, Tamil Nadu, India.
[b] Department of Tamil Studies, Cauvery College for Women (Autonomous), Tiruchirappalli-620028, Tamil Nadu, India.
[c] Department of Tamil, APC Mahalakshmi Women's College, Thoothukudi-628002, Tamil Nadu, India.
[d] Department of Tamil, St. Joshep College, Tiruchirappalli-620002, Tamil Nadu, India.
*Corresponding author Email: nivethatamil1992@gmil.com
DOI: https://doi.org/10.54392/ijot2232
Received: 30-03-2022; Revised: 09-06-2022; Accepted: 13-06-2022; Published: 17-06-2022

**Abstract:** All Tamil literature is a gift given to us by our forefathers. All literature expresses the life values of the people. In this way, folk literature, which is unwritten literature, reflects human feelings. A man expresses his subconscious thoughts and beliefs through folk literature. In folk literature that includes folk songs, folk tales, fables, proverbs, etc., man expresses his life experiences from birth to death. Folk In literature, man expresses his life records from birth to death. In lullabies, events such as a mother's love for her child and making children realise the importance of relatives are important to human life. The way agriculture is expressed in special kummi songs, the subconscious impressions of man through faith in God, the subconscious impressions of man through themangu songs, the expression of male and female relationships through themangu songs, the characteristics of grooms who collect dowry from women through marriage, and indicate social disorders This review article is intended to reveal women lamenting the loss of their mothers in the metaphorical songs that express their characteristics at the end of human life, and women who have lost their husbands are marginalised in society due to their helpless condition.

**Keywords:** Tamil Songs, Folklore, Folk Literature, Kummi Songs, Themangu Songs

## முன்னுரை

இன்பம், துன்பம் நிறைந்த மனித வாழ்வில் மன உந்துதலால் பல்வேறு செயல்களை மனிதன் மேற்கொள்கிறான். மன உந்துதலால் செயல்களை செய்ய முற்படும் சூழலில், தனது நுண்ணறிவால் பிறர் பாராட்டும் செயல்களை செய்கிறான். எனவே ஒவ்வொருவரின் செயலுக்கும் அவர்களின் மன உந்துதலே அடிப்படையாக அமைகின்றன. இந்த உந்துதல் தற்காலத்தில் "உளவியல்' என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது.

## ஆய்வு அணுகுமுறைகள்

ஏட்டில் எழுதாத இலக்கியமாக விளங்கும் நாட்டுப்புற இலக்கியம் பாமரர்களின் இலக்கியம் என்று போற்றப்படுகிறது. மன உணர்வுகளையும், சூழல் சார்ந்த பண்பாடுகளையும் வெளிப்படுத்தும்

நாட்டுப்புற இலக்கியம் மக்களின் கலாச்சாரம், பழக்க வழக்கங்களையும் வெளிப்படுத்தும் வகையில் அமைகிறது. உளவியல் பண்புகளை வெளிப்படுத்துவதால் ஒப்பீட்டு நோக்கு ஆய்வும், விளக்கமுறை ஆய்வும் இக்கட்டுரையில் பின்பற்றப்பட்டுள்ளது.

## உளவியல்

உள்ளத்தின் இயல்புகளையும், அவற்றின் செயல்பாடுகளையும் பகுத்து விளக்கும் அறிவியல் துறையே உளவியல் எனப்படும். மனிதனின் நடத்தையைப் பற்றிய அறிவியலே உளவியல் என்றும் உளவியலை வரையறைப் படுத்துவர். உளவியல் மனித நடத்தை, சிந்தனை, வளர்ச்சி, ஆளுமை, உணர்ச்சி மற்றும் உந்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

## நாட்டுப்புற இலக்கியத்தில் உளவியல்

நாட்டுப்புறப் பாடல்கள், நாட்டுப்புறக் கலைகள், கதைப்பாடல்கள் ஆகியவற்றின் தொகுப்பே நாட்டுப்புற இலக்கியமாகும். இவற்றுள் நாட்டுப்புறப் பாடல்களில் அமைந்துள்ள உளவியல் பண்புகளை பின்வரும் பகுதிகள் பிரதிபலிக்கின்றன.

## நாட்டுப்புறப் பாடல்கள்

மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்வில் பிண்ணிப்பிணைந்த இன்றியமையாத கூறுகளில் நாட்டுப்புறப் பாடல்கள் முதன்மையிடம் பெறுகின்றன. மனிதன் பிறந்தபொழுது தாலாட்டுப் பாடுவதிலிருந்து மனிதனின் இறுதி வாழ்நாள் ஒப்பாரிப் பாடல்கள் வரை மனிதனின் வாழ்வில் பாடல்கள் முதன்மையிடம் வகிக்கின்றன.

## தாலாட்டுப் பாடல்களில் உளவியல்

தாலாட்டுப் பாடல்கள் தாயின் பாச உணர்வு, உறவினர்களின் முக்கியத்துவம் மற்றும் குழந்தைகளின் குறும்புத்தனங்கள் ஆகியன வெளிப்படும் வகையில் அமைகிறது.

“வெள்ளியால் செய்த ஏட்டில்

வைர எழுத்தாணி கொண்டு எழுத

பரிவுடன் உன்மாமன் வந்திடுவான்”

எனும் இப்பாடலில் தாய்மாமன் உறவுநிலையும், தாய்மாமனின் செழிப்பினையும் குழந்தைக்கு எடுத்துக்கூறும் வகையில் அமைகிறது (Arivuduai Nambi, 2010).

## தாலாட்டுப் பாடல்களில் கல்வி

குழந்தைகளை உறங்க வைப்பதற்காகப் பாடப்படும் தாலாட்டுப் பாடல்களில் குழந்தைகளின் உறவினர்கள் சிறப்பு, குழந்தைகளின் குறும்புத்தனங்கள் வெளிப்படுவதோடு மட்டுமின்றி கல்வியின் முக்கியத்துவமும் வெளிப்படுகின்றன.

“சரஸ்வதி உன் நாவில்வர

பொன்னால் எழுத்தாணி

பொருந்தும் புலந்திரனோ”

என்ற தாலாட்டு வரிகளில் குழந்தைக்கு நாமகளான சரஸ்வதி அருள் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்துகிறாள் (Arivuduai Nambi, 2010).

## கும்மிப்பாடலில் உளவியல்

கும்மிப்பாடல்களோடு ஆடப்படுவது கும்மி ஆட்டமாகும். இக்கும்மி ஆட்டம் பெண்கள் மற்றும் ஆண்களால் ஆடப்படுவது ஆகும். பெரும்பாலும் இது பெண்களால் ஆடப்படுகிறது. பெண்கள் வளமையோடு தொடர்புடையவர்கள் என்பதால் திருவிழாக் காலங்களில் முளைப்பாரி விழாவில் இக்கும்மி ஆட்டம் ஆடப்படுகிறது. கும்மி ஆடுவதால் விதைகள் தளிர்த்து வளர்ந்து வரும் என மக்கள் நம்புகின்றனர். இவர்கள் பாடும் கும்மிப் பாடல்களில் மழையினால் பயிர்வளம் பெருக வேண்டும் எனும் நோக்கம் வெளிப்படுகிறது.

"மாடுகட்டிப் போரடித்து மாளாது செந்நெல் என்று

ஆனைகட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை"

என்ற கும்மிப் பாடலில் மதுரையின் நகர்வளம் வெளிப்படுவதை உணரமுடிகின்றது. கும்மிப்பாடல் மூலம் பெண்களின் மரியாதை, வளமைக்கு மூல காரணம் பெண்கள் என்பதனை உணரமுடிகிறது (Alla Gunesakeran, 2009).

## கும்மிப்பாடலில் கடவுள் வழிபாடு

கிராமப்புற மக்களின் வழிபாடுகளில் சிறு தெய்வ வழிபாடு முக்கியத்துவம் பெறுகிறது. சிறு தெய்வங்களில் காளியம்மன், மாரியம்மன் வழிபாடுகள் சிறப்பிடம் வகிக்கிறது. இந்த வழிபாட்டு முறைகள் கும்மிப்பாடல்களில் பிரதிபலிக்கிறது.

"வெள்ளி முக்காலி மேபுறமாம் - நல்ல

வெண்ணதொட்டுத் தலமுழுகி

வெண்ணதொட்டுத் தலமுழுகி

வெறுத்த நித்திர செய்யிற காளிக்கு

எழுப்பிக் கும்மி கொட்டுங்கம்மா"

இப்பாடல் காளியம்மன் மகிமையும், அம்மனுக்கு செய்யப்படும் அலங்காரமும் பற்றி எடுத்துரைக்கப்படும் வகையில் அமைந்துள்ளது (Arivuraj, 2008).

## தெம்மாங்குப்படாலில் உளவியல்

தேன், பாகு போன்ற இனிமையை உடையது தெம்மாங்குப் பாடல்கள் என்றும் கூறுவர். தெம்மாங்குப் பாடல்கள் பெரும்பாலும் உறவின் சிறப்பும், அன்பின் பெருமையும் வெளிப்படும் வகையில் அமைகின்றன. கிராமத்துக் கண்மாய்க் கரை ஓரம் நடந்து செல்லும் தன் காதலி தன்னை ஏறெடுத்துப் பார்க்காமல் செல்வதைக் கண்டு வருத்தமடையும் காதலன் தன் காதலி கடைக் கண்களால் ஒரு பார்வை பார்க்க வேண்டும் என்று பின்வருமாறு பாடுகிறார்

"கம்மாக் கரையோரம் கால் கடுக்கப் போற புள்ள

கண்ணடிச்சு என்னப் பாரு தங்க ரத்தினமே நான்

காதலாலே ஏங்குகிறேனே பொண்ணு ரத்தினமே"

இப்பாடலில் காதலன் தன் உள்ளத்திலுள்ள வெளிப்படுத்தும் விதத்தில் பாடல் காடுகிறான் (Arivuduai Nambi, 2010).

காதல் வாழ்க்கையில் பெண்களின் கடைக்கண் பார்வைக்கு உள்ள ஆற்றலே தனித்துவமாகும். இக்கருத்தினையே பாரதிதாசனும்,

"கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்

மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர் கடுகாம்"

என்று தன் சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் குறிப்பிட்டுள்ளார் (Paavendhar Bharathidhasan, 2008).

## திருமணப் பாடல்களில் உளவியல்

மனித வாழ்க்கையில் மகிழ்ச்சியும், எதிர்பார்ப்பும் நிறைந்த ஒரு நிகழ்வு திருமணமாகும். திருமணத்தில் இரு குடும்பம் இணைந்து ஒரு புதிய உறவு ஏற்படுகிறது. எனினும் திருமணத்தில் வரதட்சணை மூலம் பலர் பாதிக்கப்படுவதையும் நாட்டுப்புறப்பாடல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

"பொண்ணு வருது

பொண்ணு வருது

பொட்டு வண்டியிலே

பொண்ண பெத்த

அப்பா வரார்

ஓட்ட வண்டியில

மாப்பிள்ளை வருது

மாப்பிள்ளை வருது

மாட்டு வண்டியில

மாப்பிள்ளையை பெத்த

அப்பா வரார்

கூட்டு வண்டியில"

இப்பாடலில் திருமணத்தின்பொருழு மாப்பிள்ளை வீட்டார் மணப்பெண் வீட்டாரிடம் வரதட்சணை வாங்கி, மாப்பிள்ளையின் தகப்பன் கூட்டு வண்டியில் வருவதாகவும், பெண்ணைக் கொடுத்த தகப்பன் ஓட்டை வண்டியில் வருவதாகவும் விமர்சனத்தோடு வரதட்சணைப் பற்றி சுட்டிக்காட்டுகின்றன (Arivuraj, 2008).

## காட்டுப்பாடல்களில் வேளாண்மை

கிராமப்புற மக்களின் முக்கிய வாழ்வாதாரம் வேளாண்மை ஆகும். மழை பொழிந்து ஊர் செழித்து தோட்டப் பகுதிகளில் வேலை செய்யும்பொழுது வேலையால் ஏற்படும் களைப்பு தெரியாமலிருக்க பெண்கள் வயல்வெளிகளில் பாடல் பாடுவதுண்டு. இதனை உழவுப்பாட்டு என்றும் கூறுவர். வேளாண்மைக்கு முக்கிய காரணம் மழை. மழையின்றி போன சூழலில் மக்கள் மட்டுமின்றி அஃறிணை உயிர்கள் கூட வருந்தும் என்பதனை வள்ளுவர்,

"விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே

பசும்புல் தலைகாண்ப அரிது"

எனும் குறளிவழி வெளிப்படுத்துகிறார் (Parimezlagar, 2012). மழையின் முக்கியத்துவத்தை,

"இருட்டாதோ மானம் அந்த

புரட்டாசி மாசம்

போயாதோ மானம் இன்னக்கி

பெருகாதோ வாய்க்கா"

எனும் பாடலின் மூலம் உணரமுடிகிறது (Arivuraj, 2008). வேளாண்மைக்கு நீர் முக்கியம். மழையை எதிர் பார்த்திருத்தல் மழைபொழிந்தால் அதற்கு ஏற்ப பயிர் செய்யும் வேளாண்மை நுட்பத்தையும் மக்கள் அறிந்திருந்தனர் என்ற உளவியல் பண்பு இப்பாடல் வழி அறியமுடிகின்றது.

"சோனை மழை பேஞ்சா நம்ம தேசம்

சோளம் பயிரேறும்

நித்தம் மழை பேஞ்சா நம்ம

நெல்லு பயிரேறும்"

இப்பாடலின் வழி பருவத்திற்கு ஏற்றாற்போல் பயிர் செய் வேண்டும் என்ற வேளாண்மை நுட்பம் வெளிப்படுகிறது (Arivuraj, 2008).

## ஒப்பாரிப் பாடல்களில் உளவியல்

நாட்டுப்புறப் பாடல்களில் அதிக அளவில் மன உணர்வைத் தூண்டக்கூடியவை ஒப்பாரிப் பாடல்களாகும். ஒரு மனிதன் வாழ்க்கை இறுதியில் அவனது குண நலன்களை வெளிப்படுத்தும் வகையில் ஒப்பாரிப் பாடல்கள் அமைகின்றன.

"மதுரையில செம்பெடுத்து நா

மல்லியப்பூ ஆரங்கட்டி

மதுரை சனத்தோட

மனக்குதெல்ல நீர்மால"

இந்த ஒப்பாரிப் பாடல்வரிகளில் தன் தாய் இறந்த பின்பு பெண்பிள்ளைகள் சடங்கு முறைகள் செய்வதையும், தன் தாயின் இழப்பு துயரினை தாங்கிக் கொள்ள இயலாததையும் பிரதிபலிக்கின்றது (Arivuraj, 2008).

## கைம்மைப் பெண் நிலை

ஒரு ஆண்மகனைச் சார்ந்து வாழும் ஒரு பெண் தனது வாழ்நாள் இறுதி காலங்களில் தன் கணவன் மட்டுமே தனக்குத் துணை என்ற மனநிலையில் இருப்பாள். தன் கணவன் தன்னை விட்டுச் சென்ற சூழலில் விதவைப் பெண் என்று சமூகத்தாரால் புறக்கணிக்கப்படுகிறாள். கைம்மைப் பெண்களின் இந்த நிலையினையும் ஒப்பாரிப் பாடல்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

"தாலிக் கழுத்திகளா

தலை நிறைஞ்ச பூக்காரி

தலை முழுகப் போகயில

தண்ணி தெறிக்குதின்னு

தள்ளிப்போ யெம்பாங்க

ஆசைக்கு செஞ்ச

அரும்பு சிறுதாலி

ஆசை முடியவில்ல

அரும்புதிர வாழவில்ல"

இப்பாடலில் கணவனை இழந்த பெண் பயன்படுத்திய தண்ணீரைக் கூட மற்றவர்கள் பயன்படுத்தாமல் அப்பெண்ணை ஒதுக்கி வைப்பதால் அப்பெண் படும் மனவேதனைகளை பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது (Arivuraj, 2008).

10.54392/ijot2232

## முடிவுரை

மக்களின் பண்பாடு, பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறைகள் ஆகியவற்றை பிரதிபலிக்கும் நாட்டுப்புற பாடல்கள் மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை அவனது வாழ்க்கை உணர்வுகளை வெளிப்படுத்தும் காலக் கண்ணாடியாக விளங்குகின்றது என்பது தெளிவாக புலனாகின்றது. தாலட்டுப் பாடல்கள், கும்மிப் பாடல்கள் போன்றன தாய்மையுணர்வினையும், கடவுள் நம்பிக்கையினையும் வெளிப்படுத்துவதாகவும், தெம்மாங்குப் பாடல்கள் வேளாண்மை நுட்பத்தினை வெளிப்படுத்துவதாகவும் அமைகின்றது. ஒப்பாரிப் பாடல்களில் பெண்கள் தாய் இறந்த பின்பு சடங்கு முறைகள் செய்வதனையும், கைம்மைப் பெண்களின் நிலையை வெளிப்படுத்தும் வகையில் அமைவதனையும் உணரமுடிகின்றது.

## References


Alla Gunesakeran, K., (2009) Naatupura Nadangalum, Paadalgalum, New Century Book House, Chennai, India.

Arivuduai Nambi, M.S., (2010) Tamiliga Naatupuraviyal Aaivukal, New Century Book House, Chennai, India.

Arivuraj, (2008) Aamaipiyal Nokkil Naatupura Paadalgal, Paavai Publications, Chennai, India.

Paavendhar Bharathidhasan, (2008) Sanjeevi Parvadathin Saaral, Paavai Publications, Chennai, India.

Parimezlagar, (2012) Thirukkural Mulamum Uraiyum, Saratha Padhipagam, Chennai, India.



## Funding

No funding was received for conducting this study.


## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

K. Nivetha, P. Sasirekha, T. Bhuvaneshwari, M. Raja, Psychology in Tamil Folk Songs, Indian Journal of Tamil, 3(3) (2022) 5-10. https://doi.org/10.54392/ijot2232